*1975 ஏப்ரல் 7]*

உடை, பெரியார் அவர்கள் பயன்படுத்திய நாற்காலி, கட்டில், பேனா, பலகை, லென்ஸ் ஆகிய பொருள்களும் அங்கே வைக்கப் படுகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், பெரியார் தேசிய இயக்கத்திலே இருந்த காரணத்தினாலே இந்தியா பூராவுமே அவரை ஈரோட்டு நாயக்கர் என்றுதான் அழைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே அவருக்கு ஈரோட்டிலே நினைவுச் சின்னம் அவர்களுக்கு அமைப்பது சாலச் சிறந்ததுதான். ஆனால் அவருடைய கருத்துக்கள் தெரிவித்துள்ள அறிவுரைகள் எல்லாம் இப்போது தமிழிலேதான் அவருடைய பிரசங்கங்கள் பூராவும் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன, அந்தப் புத்தகங்களையெல்லாம் ஆங்கிலத்திலே வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அது மட்டுமல்ல, வைக்கத்திலே அவர் சத்தியாக்கிரகம் நடந்தபோது என்ன நடந்தது என்று அவர் சாவதற்கு 6 மாதத்திற்கு முன்னாலே தான் ரேடியோவிலே கேள்வி பதில் என்ற முறையிலே பல விஷயங்கள் சொன்னார்கள். அதிலேயும் உள்ள விஷயங்களை டேப் ரிக்கார்டு எடுத்து வெளியிடுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இப்போதுதான் பெரியார் பிறந்த இல்லத்தை பெரியார் அண்ணா இல்லமாக மாற்றி பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும் அண்ணா அவர்களுடைய கொள்கைகளையும் அந்த இல்லம் மூலமாக வெளியிட முயற்சி செய்து வருகிறோம். திரு. கே. டி. கே. அவர்கள் தெரிவித்த யோசனைகள் நல்ல யோசனைகள், அவைகளை யெல்லாம் படிப்படியாக செயல்படுத்த அரசு முயற்சி செய்யும்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, பகுத்தறிவுச் சிங்கமான தந்தை பெரியார் அவர்களுக்கு மாநில அரசு அமைக்கிற நினைவுச் சின்னத்தைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தியா முழுவதும் உள்ள மக்கள் அறியக்கூடிய முறையில் மத்திய அரசு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்லியிருந்தது, அதைப்பற்றி மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சென்ற ஆண்டு அதைப் பற்றி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினேன். இந்த ஆண்டு காலம் போதுமானதாய் இல்லை, மீண்டும் நினைவுபடுத்துங்கள்

என்று அப்போது அந்தத் துறை அமைச்சராக இருந்தவர்கள் கடிதம் எழுதினார்கள். இந்த ஆண்டு வெளியிட வேண்டுமென்று அரசின் சார்பில் மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** நம்முடைய தந்தை பெரியார் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் ஜாதி ஒழிப்பிற்காகப் பாடுபட்டார்கள். அப்படிப்பட்ட பெரியாரை இன்னும் பெரும்பாலானவர்கள் ராமசாமி நாயக்கர் என்றே அழைத்துக் கொண்டிருக்கிறார்கள், அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? தந்தை பெரியார் அவர்களுக்கு வைக்கத்திலே நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு தமிழக அரசு கேரள அரசைக் கேட்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நம்முடைய கே. டி. கே. அவர்களே, 18-வது நாஸ்திகர் என்று கையெழுத்துப்போட்ட திரு. கே. டி. கே. அவர்களே, பெரியாரையே அந்தக் காலத்திலே நாயக்கர் என்று தான் அழைப்பார்கள் என்று சொன்னார்கள், செல்லமாக அழைக்கிறார்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும், இன்றைக்கும் யாராவது அவரை நாயக்கர் என்று அழைத்தால் செல்லமாக அழைக்கிறார்கள் என்றுதான் கருத வேண்டும், செழியனின் கேள்வியை பத்திரிகையாளர்கள் குறித்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். வைக்கத்திலே பெரியாருக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று திரு. செழியன் அவர்கள் கேட்ட கேள்வி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. அவர்கள் காதில் விழுந்து இருக்கும், அவர் அங்கு சொல்வார் என்று நினைக்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** பெரியார் நினைவுச் சின்னம் அமைப்பதற்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்வதாக இருப்பது மிக நல்ல முயற்சி, வேண்டிய முயற்சி கூட, பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் பொதுமக்களிடமிருந்து நிறைய நிதியைப் பெற்று டிரஸ்ட் வைத்திருந்தார்கள். இப்போது அந்த டிரஸ்டுக்கு மத்திய அரசு ஏகப்பட்ட இன்கம்டாக்ஸைப் போடுகிறார்கள், அது மட்டுமல்ல; அந்த டிரஸ்டுக்குப் பல தொல்லைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள், ஆகவே, அந்த டிரஸ்டை எடுத்து பெரியார் ஞாபகார்த்தமாக பல தொண்டுகள் அதன் மூலம் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது சிக்கலான கேள்வி. ஏற்கனவே பெரியார் அவர்கள் அந்த டிரஸ்ட் எப்படி இருக்க வேண்டுமென்று அமைத்து அந்த டிரஸ்ட் மெம்பர்கள் யார் இருக்க

1975 ஏப்ரல் 7]

வேண்டுமென்று திட்டமிட்டு அமைத்திருக்கிறார்கள். அதிலே போய் நாம் தலையிடுவது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** அரை நூற்றாண்டுக்காலத்திற்கு முன்னாலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் மேட்டுக்குடி மக்கள் இருக்கிற இடத்திற்குச் செல்லவேண்டுமென்றால் குறிப்பாக கேரளத்திலே நான் சண்டாளன் வருகிறேன் என்று சொல்லி விட்டுத்தான் செல்லவேண்டுமென்ற நிர்ப்பந்தம் எல்லாம் இருந்தது, அதை எதிர்த்து வைக்கத்திலே பெரியார் அவர்கள் நடத்திய போராட்டம் மூலமாகத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்ல முடிந்தது, ஆகவே வைக்கத்தினுடைய வரலாற்றை முதலமைச்சர் அவர்கள் எழுதி வெளியிட உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் எழுதி வெளியிடு வதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களோ அல்லது அமைச்சர்களோ அந்த விழாவிலே கலந்துகொள்வதற்கு முன்வந்தால் அந்தப் புத்தகத்தை வெளியிடு வதற்குத் தயாராக இருக்கிறேன்.

**திரு. கு. காமாட்சி :** ஈரோட்டிலே தந்தை பெரியார் அவர்கள் இல்லத்திலே உருவானவர்கள் அண்ணா அவர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவையடக்கத்தின் காரணமாக தன்னுடைய பெயரை முதலமைச்சர் அவர்கள் இணைத்துக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அங்கே உருவானவர்களில் ஒருவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்பதை நாங்கள் அறிவோம். ஆகவே பெரியார்-அண்ணா இல்லம் என்று இருப்பதைவிட பெரியார்-அண்ணா-கலைஞர் இல்லம் என்று பெயர் வைக்க அரசு வழிவகை செய்யுமா ? ஆனால் அதை ஒத்துக் கொள்ளாவிட்டால் மற்ற வகையில் ஏதாவது ஒரு சிறப்பான நினைவு இருக்கிற வகையில் செய்ய அரசு ஒத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த இல்லத் திறப்பு விழாவின்போது அந்த திறப்புவிழாக் கல்லில் என்னுடைய பெயரும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. அவர்கள் வானொலிப் பெட்டியைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிற போது பெரியார் அவர்களை சுதந்திரப் போராட்ட வீரர் என்று குறிப்பிட்டு ஆரம்பித்தார்கள். அந்தப் பேட்டியிலேயே பெரியார்

அவர்கள் தன்னை சுதந்திரப் போராட்ட வீரர் அல்ல, சமுதாய சீர்திருத்தவாதி என்ற அடிப்படையிலேதான் சொல்லக்கூடிய வகையில் பேட்டி இருந்தது. அவர்களுடைய கருத்துக்களை சொற்பொழிவுகளை சிந்தனைகளை கல்லூரி மாணவர்கள் இடையே பரப்புகின்ற வகையில் பாடப்புத்தகங்களில் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிரச்னை எழாத அளவுக்கு அதே நேரத்தில் அறிவுச் சுடர் மக்கள் உள்ளத்திலே உருவாவதற்கு பெரியார் சொற்பொழிவுகள், கருத்துக்கள் இவற்றைத்திரட்டி ஒரு சில பாடப்புத்தகங்களிலே வைக்கலாமா என்பதுபற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. பெரியார் சுதந்திரப் போராட்ட வீரர் அல்ல, சமுதாய சீர்திருத்தவாதி என்று அறிவித்தாலும் பெரியாரே அப்படி அறிவித்தாலும் அவர் சுதந்திரப் போராட்ட வீரர் அல்ல என்ற கருத்தை யாருமே ஏற்கமாட்டார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தளநாயகராக இருந்து காந்தியடிகள் போன்றவர்களால் பாராட்டப் பெற்றவர்கள் பெரியார் அவர்கள்.

**திரு. நா. வீராசாமி:** * * *

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம் என்பது என் யோசனை.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை:** தந்தை பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னமாக சட்டப் பேரவை மண்டபத்திலே அவருடைய திருவுருவப்படத்தை வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சட்டப் பேரவை மண்டபத்தில் பெரியார் படம் மாத்திரமல்ல, வேறு சில தலைவர்களின் படங்கள் வைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கைகள் அரசுக்கு வந்துகொண்டேயிருக்கின்றன. அதையெல்லாம் ஆலோசித்துத் தான் எந்த வகையிலே இந்த மன்றத்திலே இடம் அமைக்கமுடியும் என்று பரிசீலனை செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீராசாமி அவர்களின் துணைக் கேள்வி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகையாளர்களும் அதை வெளியிடவேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

*1975 ஏப்ரல் 7]*

**திரு. எம். சுரேந்திரன் :** பெரியார், அண்ணா, திருவள்ளுவர் போன்றவர்களுக்கு சிலை எழுப்புவது, படம் வைப்பது போன்றவைகளைவிட அவர்களுக்கு அவர்கள் சொல்லிய நீதிகளையும் நடைமுறையிலே கடைப்பிடித்து வாழ்ந்துகாட்டி அவர்கள் வாழ்ந்துகாட்டிய நெறிகளைப் பரப்புவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது என்பது அவ்வளவு எளிதானதல்ல. அதற்கான நேரமும் போதாது என்று கருதுகிறேன். அவர்களுடைய கேள்வி பெரியாருக்கு நினைவுச் சின்னம், சிலையெழுப்புவது, படம் திறப்பது என்பதைவிட, அண்ணா அவர்களுக்கு சிலையெழுப்புவது, படம் திறப்பது என்பதைவிட, அவர்கள் சொன்ன நீதிகள், கருத்துக்களைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது. ஒவ்வொரு சிலை திறக்கப்படுகிறபோதும் படம் திறக்கப் படுகிறபோதும் அவர்கள் தந்த கருத்துக்களை நெஞ்சில் நிறுத்தி அப்படிச் செயல்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் சொல்கிறார்கள். அதுதான் நடவடிக்கை.

**திரு. என். கிட்டப்பா :** தந்தை பெரியார் அவர்கள் நினைவாக அவருடைய பெயரால் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு பல்கலைக் கழகங்கள் தேவையென்பதை நாம் ஒத்துக்கொண்டு கொள்கையளவிலே ஏற்று அனுமதி கேட்டிருக்கிறோம், அந்த முயற்சியிலே ஈடுபட்டு அரசு அனுமதி கேட்டு இருக்கிறது, முதலிலே அனுமதி கிடைத்து பல்கலைக் கழகங்கள் திறக்கப்படுகிறபோது பெயர்கள்பற்றிச் சிந்திக்கலாம்.

**திரு. முனு ஆதி :** மவுண்ட் ரோடிலே அரசின் சார்பிலே தந்தை பெரியார் அவர்களுக்கு சிலை நிறுவப்பட்டதாகச் சொன்னார்கள். அண்ணா தி.மு.க. தந்தை பெரியார் அவர்களுக்கு சிலை அண்ணா மேம்பாலத்திற்கு கீழே வைக்கவேண்டுமென்று அனுமதி கேட்டும் கிடைக்கவில்லை, இப்போதுதான் கிடைத்தது. இடம் கிடைக்காததால் வேலை தடங்கலாக இருக்கிறது, ஆகவே உடனடியாக அனுமதியளிக்கப்படுமா ?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முனு ஆதி அவர்கள் இரண்டு விஷயங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். மவுண்ட் ரோடு என்று சொன்னார்கள். இல்லை, அது மாற்றப்பட்டு அண்ணா சாலையாகி ரொம்ப நாளாகிறது. அதை மாற்றிக் கொள்ள வேண்டும். மவுண்ட் ரோடு என்பதை அண்ணா சாலை என்று நான் முதலமைச்சரானதும் மாற்றி விட்டேன்.

**திரு. முனு ஆதி:** நீங்கள்தான் முதலிலே சொன்னீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சொல்லவில்லை, அண்ணா சாலை என்று தான் சொன்னேன். இரண்டாவது, ஏதோ இப்பொழுதுதான் அனுமதி கொடுத்தோம் என்று சொன்னார்கள். அது மிகவும் தவறு. இப்பொழுதுதான் அனுமதி கொடுத்திருந்தால், அப்படிக் கொடுப்பதற்கு முன்பே அந்த விழா நடத்தியது முறையாகாது. நன்றாகத் தெரியும், எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும், திரு. செழியன் அவர்கள்கூட வந்ததாக நினைவு, நண்பர் திரு. ப. உ. சண்முகம் அவர்களிடம்—பொதுப்பணித் துறை அமைச்சரவர்களிடம்—கேட்டு இடம் குறிக்கப்பட்டு, கேட்ட இடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுக்கு ஒரு கௌரவம் தெரிவிக்கும் வகையில் அவருடைய பிறந்த நாளை நம்முடைய அரசு விடுமுறை நாளாக அறிவிக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பெரியார் ஓய்வே விரும்பாதவர். ஆகவே அவருடைய பிறந்த நாளுக்கு விடுமுறை அளிப்பது பெரியாருக்கு நாம் செலுத்துகின்ற மரியாதை ஆகாது.

### கிருஷ்ணவேணி மில்ஸ், கோயம்புத்தூர்.

*** 564 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையிலுள்ள கிருஷ்ணவேணி மில்ஸ் ஜவுளி ஆலையில் முன்பணம் (Deposit) செலுத்தியவர்கள் அடங்கிய தூதுக் குழுவினர் 21—11—1973 அன்று நேரில் கோரிக்கை ஏதேனும் எழுப்பினரா?

*1975 ஏப்ரல் 7]*

(இ) ஆமெனில், அதன் விபரமென்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) 1973-ம் ஆண்டு நவம்பர் மாதம் கிருஷ்ணவேணி ஜவுளி மில்லில் முன்பணம் செலுத்தியவர்களில் சிலர் முன்பணத்தை வட்டியுடன் திருப்பித் தர வேண்டுமென்று கேட்டு அரசுக்கு ஒரு மனு அனுப்பியிருந்தார்கள். நிவாரணச் சட்டத்தின்படி மில்லின் கடன்களை திருப்பிக் கொடுப்பது ஒத்திவைக்கப்பட்டிருந்தது. 1973-ம் ஆண்டில் மில்லுக்கு கிடைத்த சொற்ப இலாபம் யந்திரங்களை பழுது பார்த்து நவீனமயமாக்குதலுக்கு செலவிடப்பட்டது. ஆகவே முன்பணம் செலுத்தியவர்களுக்கு முன்பணத்தை திருப்பிக் கொடுக்க முடியாமல் போயிற்று. 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மில்லை மத்திய அரசு அரசுடைமையாக்கிவிட்டது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, அவர்கள் முன்பணத்தைத் திருப்பிக் கேட்டதோடு மட்டுமல்லாமல் வேறு ஏதாவது கோரிக்கை எழுப்பினார்களா? அதை நிறைவேற்ற அரசாங்கம் என்ன முயற்சியெடுத்திருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அவர்கள் டெபாசிட் போட்டவர்கள். டெபாசிட்டைத் திருப்பித் தர வேண்டுமென்றுதான் கேட்டதாக நினைவு.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்த ஆலையிலே டெபாசிட் போட்டவர்கள் சாதாரண தொழிலாளர்கள்தான். அவர்கள்தான் அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுகள் கழித்து அவர்களுக்கு இலாபம் ஏற்படுமேயானால் அவர்களுக்கு அந்தச் சலுகையை அளிப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அதை நம்பிக்கொண்டு பலர் இருந்தார்கள். டெபாசிட் போட்ட பலர் வேலை இல்லாமல்கூட இன்றைக்கு எந்தவிதமான வசதியுமில்லாமல் கண்ணீர் விட்டுக்கொண்டு இருக்கிறார்களே, அது சம்பந்தமாக இனிமேலும் ஒத்திப்போடாமல் இந்த ஆண்டு வழங்குவதற்கான ஏற்பாட்டைப்பற்றி இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, மத்திய அரசுக்கு நாம் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது அங்கத்தினர் அவர்கள் அந்த முயற்சியைத் தொடர வேண்டும்.

[1975 ஏப்ரல் 7

*Export of Handloom goods*

* 565 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the quantity of handloom good exported from the Madras Harbons during 1972–73 and its value?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சுமார் ரூ. 639.30 இலட்சம் மதிப்புள்ள சுமார் 9.2 இலட்சம் கிலோ கிராம் எடையும், 134.54 இலட்சம் மீட்டர் அளவுள்ள கைத்தறி துணிகள், 1972-73-ம் ஆண்டு, சென்னை துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதியாயின.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், வருஷா வருஷம் வெளிநாட்டிற்கு அனுப்பும் கைத்தறித் துணிகள் குறைவதற்கான காரணம் என்ன? அதை வெளிநாட்டிற்கு அனுப்பும் முறையிலே சர்க்கார் அதற்கு ஊக்குவிக்கும் முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, உலகச் சந்தையில் போட்டி போடும் ஒரு வாய்ப்பை இழக்கும் நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்பதுதான் ஒரே பரிகாரம். இதன் மூலம் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி அத்தனையும் மத்திய அரசுக்குப் போகிறது. ஆகவே, மத்திய அரசு கைத்தறித் துணிகளை ஏராளமாக உலகச் சந்தையில் விற்க தனிச் சலுகைகள் அளித்தாலொழிய இதற்குப் பரிகாரம் கிடையாது.

*Accumulation of yarn and cloth*

* 566 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(a) whether a large quantity of yarn and cloth have accumulated in the Textile mills in this State during October 1974; and

(b) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம். 2

(இ) இதற்கான காரணங்கள்:

வங்கிகள் பணம் வழங்குவதில் அனுசரித்த கட்டுப்பாட்டினாலும் வெளிச்சந்தையில் ஏற்பட்ட மந்த நிலைமையினாலும் ஆலைகளிலிருந்து வெளியே போகும் சரக்குகளின் அளவு குறைந்தது பணவீக்கத்தினாலும், வாங்கும் சக்தி குறைவினாலும் பொது